# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2017-2018-ம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கை

**(DMFT - Annual Budget)**

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை திட்டங்களின் வரவு செலவு அறிக்கையின் விபரம் பின்வருமாறு.

மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண். 764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையானது உருவாக்கப்பட்டு 31.03.2018-வரை ரூ.86,88,191/-(ரூபாய் எண்பத்து ஆறு லட்சத்து எண்பத்து எட்டாயிரத்து நூற்று தொன்னூற்று ஒன்று மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 2017-2018-ம் நிதியாண்டில் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு எந்த ஒரு திட்டத்திற்கும் அனுமதி வழங்கவில்லை.

மேலும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மேல்முறையீட்டு வழக்கு எண். W.A.(MD)No.972/2017, நாள்.29.08.2017-ன்படி திருமதி. ஆவணம்மாள் (லேட்) என்பவரின் கணவர் திரு.சேகர் என்பவருக்கு இழப்பீட்டு தொகையாக **ரூ.5,00,000/-** (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வழங்க அரசுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி தொகையினை மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை குவாரி குத்தகைதாரர் திரு.இராதாகிருஷ்ணன் என்பவரிடமிருந்து வசூல் செய்ய வருவாய் வசூல் சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2017-2018-ம் நிதியாண்டுகளில் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டுள்ள தொகை விபரம் பின்வருமாறு.

2017-2018

| மாதம் | சீனியரேஜ் தொகை மூலம் பெறப்பட்ட அறக்கட்டளை நிதி (ரூபாயாக) | நீதிமன்றம் மூலம் அபராத தொகையாக பெறப்பட்ட அறக்கட்டளை நிதி (ரூபாயாக) | மொத்தம் (ரூபாயாக) |
|---|---|---|---|
| ஏப்ரல் 2017 முதல் அக்டோபர் 2017 | 28,55,136 | - | 28,55,136 |
| நவம்பர் 2017 | 4,96,753 | - | 4,96,753 |
| டிசம்பர் 2017 | 5,34,148 | - | 5,34,148 |
| ஜனவரி 2018 | 28,90,261 | - | 28,90,261 |
| பிப்ரவரி 2018 | 13,79,914 | - | 13,79,914 |
| மார்ச் 2018 | 5,31,979 | - | 5,31,979 |
| **மொத்தம்** | **86,88,191** | **-** | **86,88,191** |

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

13/12

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.

13/12/22 13/12/22

13/12/22
2-E (T.A.)